**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை – 15.5.2013**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் வகையிலும், பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ்நாடு நீர் பற்றாக்குறை உள்ள மாநிலம் என்பதால், பாசனத்திற்கு இப்பொழுது கிடைக்கும் நீரினை வீணாக்காமல் சிக்கனமாக பயன்படுத்தி, பயிரிடும் பரப்பினை அதிகரித்து அதிக மகசூல் பெறுவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் முதலான நுண்ணீர் பாசன அமைப்புகளை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும், இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழக அரசு வழங்கி இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

அதிகரித்து வரும் மின்சாரத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை மானியத்தில் வழங்கும் திட்டத்தை எனது தலைமையிலான அரசு முதன் முதலாக சென்ற ஆண்டு அறிவித்தது. இதனைச் செயல்படுத்தும் வகையில், டெல்டா மாவட்டங்களில் 500 சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை 80 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் பணிகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த பம்பு செட்டுகள் விரைவில் வழங்கப்படும்.

தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்த பாசன நீர் மற்றும் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, மின்சாரத்திற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில், வேளாண் பாசனத்திற்கு ஒரு சிறந்த மற்றும் நிரந்தரத் தீர்வு காணும் வகையில், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கவும், அதனுடன் நுண்ணீர் பாசன அமைப்புகளை இணைத்தும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2013–2014 ஆம் நிதியாண்டில், வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு குழாய் கிணறு, ஆழ் குழாய் கிணறு, திறந்த வெளி கிணறு மற்றும் தரை மட்ட நீர் தேக்க தொட்டியிலிருந்து நீரை இறைக்க ஏதுவாக, 80 விழுக்காடு மானியத்துடன் கூடிய, 5 குதிரைத் திறன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் சூரிய ஒளியினை முழுமையாக தொடர்ந்து பெற ஏதுவாக, நகரும் வகையில், Solar Tracking வகையில் அமையும் சூரிய தகடு பயன்படுத்தப்படும் 2,000 ஏ.சி பம்பு செட்டு அமைப்புகளை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தற்போதுள்ள நுண்ணீர் பாசன அமைப்புகளை நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்ற முதன்மை தொழில் நுட்பங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. ஒரு

அமைப்பிற்கான செலவு தோராயமாக 5 லட்சம் ரூபாய் ஆகும். இதில் அரசு மானியம் 80 விழுக்காடு, அதாவது 4 லட்சம் ரூபாய் ஆகும். விவசாயியின் பங்களிப்பு 20 விழுக்காடு, அதாவது ஒரு லட்சம் ரூபாய் ஆகும். இதற்கென அரசுக்கு 100 கோடி ரூபாய் செலவு ஏற்படும். விவசாயிகளின் பங்களிப்பான 20 விழுக்காடு தொகையை விவசாயிகள் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஏதுவாக, தேவைப்படும் விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு கூட்டுறவு வங்கிக் கடன் வசதி பெறவும் ஏற்பாடு செய்து தரப்படும்.

இத்திட்டம், விவசாயிகளுக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு உகந்த சூரிய சக்தியினை பயன்படுத்திடவும், நுண்ணீர் பாசனம் மூலம் பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்திடவும், வேளாண் பயிர்களில் உயரிய சாகுபடி முறைகள் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் பசுமை குடில் மற்றும் நிழல் வலை முறையில் சாகுபடி போன்ற பல்வேறு நவீன தொழில் நுட்பங்களுடன் உயர் மகசூல் ரகங்களையும் பயன்படுத்தி, அதன் மூலம் உற்பத்தியினை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்திடவும் இத்திட்டம் வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******